பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 12 திங்கட்கிழமை 28.11.2022 கதிர் 23

### இது ரகசியம் அல்ல!

மாவீரர் தினம் இம்முறை பெரிய விக்கினம் ஏதுமின்றி, அங்கிங்கு ஒரு சில சம்பவங்களோடு, முழு அளவில் உணர்வுபூர்வமாக நடந்தேறி முடிந்து விட்டது.

தென்னிலங்கை ஆட்சிப் பீடம் இந்த முறை மாவீரர் தினத்தை ஒரு நடுநிலைக்

☞2



# மாவீரர்களை நினைவேந்த கடலெனத் திரண்ட மக்கள்

## கொழுந்துவிட்டெரிந்தன ஈகைச்சுடர்கள் கண்ணீரால் நனைந்தது தமிழர் தாயகம்







யாழ்ப்பாணம், நவ. 28

தாயக விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த வீரமறவர்களுக்கு - உயிர்க் கொடையாளர்களுக்குச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நேற்று நடைபெற்றன.

தாயகத்தில் உள்ள துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள் இன்று நேற்று மாலை கண்ணீரால் நனைந்தன.

☞2

## ஹிட்லர் ஆட்சி நீண்டகாலம் நீடிக்காது ரணிலுக்கு ஹிருணிகா எடுத்துரைப்பு!

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அப்பாவி மக்கள் அதனை தாங்கிக் கொள்ள முடியாமல் வீதிகளில் இறங்கி போராடும் நிலையில் அதனை இராணுவத்தைக்


☞2



## உலகின் மிகப்பெரிய விமானம் மத்தளவில் நேற்று இறங்கியது

உலகின் மிகப்பெரிய உக்ரைனிய சரக்கு விமானமான அன்டோனோவ் ஆன் -225 (Antonov An-225) விமான வகையை சேர்ந்த மற்றொரு சரக்கு விமானம்

☞2



## குளத்தில் மூழ்கி யுவதி உயிரிழப்பு



அனுராதபுரம் ஹிதோகம திபுல்வெவ குளத்தில் மூழ்கி இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரத்திற்கு யாத்திரையாக

☞2

## றுகுணு கல்விக் கல்லூரியில் மோதல் 12 ஆசிரிய மாணவர் ஆஸ்பத்திரியில்

றுகுணு தேசிய கல்வி கல்லூரியில் ஏற்பட்ட மோதலில் மாணவர்கள் குழுவொன்று தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்று தற்போது பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக கடமையாற்றும் மாணவர்கள் குழுவொன்று விஞ்ஞான பீடத்தில்

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணோட்டத்துடன் அவதானித்திருந்தால், மக்களின் உண்மையான நினைவேந்தல் உணர்வை புரிந்துகொண்டிருக்கும். புலிக் கண்ணாடி போடாமல், சுயாதீன பார்வையில் நோக்கி இருந்தால், தமிழ் மக்களின் - குறிப்பாக உறவுகளை இழந்த நெருங்கியவர்களின் - சோகத்தையும், அதை ஆற்றுப்படுத்தும் ஒரு நினைவாக இது இடம் பெறுவது அவசியம் என்பதையும் அது இலகுவாகப் புரிந்து கொண்டிருக்கும். ஒன்று கூடி நினைவேந்தல் செய்வது தரும் ஆற்றுப்படுத்தலை ஆட்சித் தலைமையும் பாதுகாப்பு தரப்பும் புரிந்து கொள்ளும் வாய்ப்பும் கிட்டியிருக்கும்.

அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானம் - நினைவேந்தலுக்குத் தடை விதிக்காமல் அனுமதி அளிக்கும் முடிவு - மெச்சத்தக்கது. புரிந்துணர்வுக்கும், நல்லிணக்கத்துக்குமான சூழ்நிலையை ஏற்படுத்தும் பூர்வாங்க நகர்வாகக் கூட இதனைப் பார்க்கலாம்.

கடந்த வருடங்களில் கோட்டா அரசின் கொடூரப் போக்கு, ஒன்று கூடி அஞ்சலிக்கும் நினைவேந்தல் உரிமையை வல்வந்தமாக, இராணுவ மேலாதிக்கத்தின் மூலம் மறுத்தது. அதனால், அப்போது அரசியல் தலைவர்கள் வீடுகளில் விளக்கேற்றி, அஞ்சலி செலுத்தும் படங்களை வெளியிட்டு ஊடகங்கள் செய்தித் தாகத்தை தணித்துக் கொண்டன.

ஆனால் இந்த முறை அரசியல் சார்பற்று, அரசியல் தலைவர்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல், தமிழீழ விடுதலைப் புலிகளின் குறியீடுகளை முன்னிறுத்தாமல், நினைவேந்தல் செய்யலாம் என்ற ஜனாதிபதி ரணிலின் நியாயமான முடிவால் நேற்றைய நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலைவர்கள் பின் தள்ளப்பட்டு விட்டார்கள். இம்முறை அவர்களைச் சுற்றி அரங்கேறும் நினைவேந்தல் படங்கள் கூட முக்கியத்துவம் பெறவில்லை. சமூக ஊடகங்களில் கூட அவை காணாமல் போயின.

அரசபடைகளால் சீரழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இந்தத் தடவை நினைவேந்தல்கள் நடந்தன. படைமுகாம்களாக ஆக்கிரமிக்கப்பட்ட துயிலும் இல்லங்களைப் பொறுத்தவரை அவற்றுக்குப் பக்கத்தில் நிலவேந்தல்கள் இடம் பெற்றன. இரண்டும் சரியானவை. இந்த நடவடிக்கை மூலம் மாவீரர் துயிலும் இல்லங்கள் தொடர்பில் தமிழர் தேசத்துக்குள்ள புனிதமான - ஆத்மார்த்தமான - உணர்வு ரீதியான - உரிமையும் உரித்தும் நிலைநாட்டப்படும் வாய்ப்பு மீளக் கிடைத்திருக்கின்றது. அந்த இடங்களில் அவற்றின் புனிதத்தை நிலைநாட்டும் விதத்தில் நினைவேந்தல் செய்தமையும், அதை உரிமையுடன் மேற்கொண்டமையும் உண்மையில் தமிழர் தேசத்தின் வெற்றி.

ஆனால், அவற்றுக்கு அப்பால், நினைவேந்தலுக்கு அரசு தந்த தாராள அனுமதியை, தெற்குடன் சீண்டலுக்கான முயற்சியாக சில இடங்களில் காய்கள் நகர்த்தப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

நாங்கள் தமிழர்கள, நமக்காக தங்களையே தற்கொடையாக ஈகம் செய்த நம் தியாகிகளின் நினைவேந்தலில் காட்டும் ஒழுங்கு, நெறிமுறை, நியாயம் போன்ற விழுமியங்கள் அதைப் பார்க்கின்ற படையினருக்கும் நெஞ்சை நெகிழ வைப்பதாக இருக்க வேண்டும். அந்த நினைவேந்தலின் நியாயப்பாடு அந்தப் படைச் சிப்பாயின் மனதை நெருடுவதாக இருக்க வேண்டும்.

அதை விடுத்து, இந்த நினைவேந்தல் அனுமதியை தென்னிலங்கையையும் படைத்தரப்பையும் சீண்டி கொழுவலுக்கு இழுக்கும் சந்தர்ப்பமாக பயன்படுத்த முயலக் கூடாது.

நினைவேந்தலுக்கான இடத்தெரிவு, தயாரிப்பு, சோடணை, ஒழுங்குமுறை போன்றவற்றில் அந்த நினைவேந்தல் இழப்பின் உரித்து தெரிய வேண்டுமே தவிர, பதில் சண்டித்தனம் அல்ல. இம்முறை நினைவேந்தல் நிகழ்வு நடத்திய ஒவ்வொருவரும் தத்தமது நிகழ்வு குறித்து இந்த நிலைப்பாட்டை சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது.

நினைவேந்தல் உரித்தை மதிக்கும் தென்னிலங்கை அரசு, அது தொடர்பில் தான் எடுத்த தாராள முடிவை தென்னிலங்கை மக்களிடமும் நியாயப்படுத்திக் காட்டக் கூடிய வகையில் நமது நினைவேந்தல் செயல்பாடுகள் ஒழுங்காக - நேர்மையாக - நடந்தனவா என்பதை நாம்தான் புள்ளியிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**- மின்னல் -**

## மாவீரர்களை நினை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குப் பொலிஸார், படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் தடைகளை ஏற்படுத்திய போதும் மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சாமல் துணிவுடன் அலைகடலெனத் திரண்டு துயிலும் இல்லங்களுக்கும், பொது இடங்களுக்கும் சென்று வீரமறவர்களை நினைவேந்தி சுடரேற்றினர்.

தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் நேற்று மாலை 6:05 இற்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது. 6:06 இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. 6:07 இற்கு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது.

அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் சமநேரத்தில் சுடர்கள் கொழுந்து விட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத்தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

## ஹிட்லர் ஆட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அடக்குவேன் என்று கூறும் ஜனாதிபதியின் செயற்பாடு ஜனநாயகத்திற்கு விரோதமானதாகும்.

மேலும் ஹிட்லர் போன்ற தலைவர்களுக்கு நீண்டகாலம் ஆட்சி செய்ய முடியாது. அவர்களின் பயணம் குறுகியது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

ஜனாதிபதி ரணில் வீதியில் இறங்கி போராட வேண்டாம், கூச்சலிட வேண்டாம் என்கிறார். இது சிறந்த தலைவர் ஒருவருடைய பண்பல்ல.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கக்கூடிய தீர்வும் இதுவல்ல. முதலில் நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை கண்டறிய வேண்டும்.

பின்னர் அதற்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். முதலில் ஏன் அப்பாவி மக்கள் வீதிக்கு இறங்கி போராடுகிறார்கள் என்பதை அறிய வேண்டும் பசியின் காரணமாகவே அவர்கள் இவ்வாறு போராடுகிறார்கள்.

நாட்டு மக்களின் வாழ்க்கை தற்போது பாரியதொரு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. அதன் காரணமாகவே அவர்கள் போராடுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் போராட்டங்களும் வன்முறைகளும் பசியின் காரணமாகவே முதலில் ஏற்படும். இரண்டாவது மனநிலை விரக்தியின் காரணமாக ஏற்படும்.

முன்னர் ஒரு தடவை மனம் விரக்தி அடைந்து அதன் ஊடாக முழு நாடும் தீ பற்றி எரிந்ததை மறக்க முடியாது. மற்றொரு தடவை அவ்வாறானதொரு நிலைக்கு நாட்டை கொண்டு செல்வதற்கு வாய்ப்பளிக்க முடியாது. இவ்வாறு நிலை ஏற்பட முன்னர் அதனை நிறுத்த வேண்டும்.

பொருளாதார நெருக்கடிகளை தாங்கிக்கொள்ள முடியாமல் வீதியில் இறங்கி போராடும் அப்பாவி மக்களை இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன், அவசர கால சட்டத்தை அமுல்ப்படுத்துவேன் என்று ஹிட்லர் போன்று செயல்படுவேன் என்று கூறுவது இதற்கான தீர்வல்ல.

நாட்டின் தலைவர்கள் மகாத்மா காந்தியை போன்று அவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

காந்தி போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகள் வரலாற்று புத்தகங்களில் நல்ல பக்கங்களில் எழுதப்படுகின்றன . ஆனால் ஹிட்லர் போன்ற தலைவர்களின் பெயர்களை மக்கள் கேட்கும் போதே வெறுக்கின்றனர் . தலைவர்கள் காந்தி போன்று இருக்க வேண்டும். ஹிட்லர் போன்றல்ல.

மேலும் ஹிட்லர் போன்ற தலைவர்களுக்கு நீண்டகாலம் பயணிக்க முடியாது. அவர்களின் ஆட்சி காலம் மிகக் குறுகியது. - என்றார்.

## உலகின் மிகப்பெரிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தரையிறக்கப்பட்டுள்ளது.

அன்டோனோவ் ஆன் - 225 விமானத்தின் வகையை சேர்ந்த மற்றொரு சரக்கு விமானமான antonov An - 124 - 100 விமானம் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை 6.35 இற்கு தரையிறங்கியுள்ளது. விமானத்திற்கு எரிபொருள் நிரப்புவதற்கும் விமான ஊழியர்கள் ஓய்வெடுத்து செல்லவும் தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மலேசியாவில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி செல்லும் வழியில் இவ் விமானம் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது. இலங்கையில் இருந்து நேற்று இரவு புறப்படவிருந்தது. இந்த விமானத்தில் மொத்தம் 24 பணியாளர்கள் உள்ளனர்.

84 மீ நீளமும் 18 மீ உயரமும் கொண்ட அன்டோனோவ் ஆன் - 225 அதிகபட்சமாக 640 டன் எடையை சுமந்து செல்லும் திறன் கொண்டது. இது 88 மீற்றர் இறக்கைகள் மற்றும் அதன் தரையிறங்கும் கியரில் 32 டயர்களுடன் ஆறு என்ஜின்களால் இயக்கப்படுகிறது.

1980 களின் பிற்பகுதியில் அன்டோனோவ் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டது. உலகில் இதுவரை வடிவமைக்கப்பட்ட மிக நீளமான மற்றும் கனமான விமானம் இதுவாகும்

## குளத்தில் மூழ்கி யுவதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த யுவதி உட்பட குழுவினர் நேற்று முந்தினம் பிற்பகல் திபுல்வெவ குளக்கரைக்கு அருகில் நீராடிக் கொண்டிருந்தனர்.

அப்போது, இந்த யுவதி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் யுவதியை மீட்டு நெலுபேவ வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் யுவதி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுக்க வடரெக்க பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹிதோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## றுகுணு கல்விக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு சிரேஷ்ட மாணவர்கள் குழு விருந்து நடத்தியதாகவும், பின்னர் அவர்களில் 50 பேர் கொண்ட குழுவொன்று விஞ்ஞான பீட வளாகத்திற்கு வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த 12 மாணவர்கள் சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பீடாதிபதி செய்த முறைப்பாடு தொடர்பில் அக்மீமன பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் தேசத்துக்கல்வி மீண்டெழ ஆரம்பித்துள்ளது!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பெருமிதம்

தமிழர் தேசத்துக் கல்வி மீண்டெழ ஆரம்பித்துள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுகள் வெளிவந்த நிலையில் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த கால கல்வி வீழ்ச்சிக்கு முற்றுப்புள்ளிவைக்கத் தொடங்கிவிட்டோம்.

2021 க.பொ.த உயர்தர பெறுபேறுகள், 2021 க.பொ.த சாதாரண தர பெறுபேறுகள் கணிசமான மாற்றத்தைத் தந்துள்ளன. ஒப்பீட்டளவில் நாம் மீண்டெழ ஆரம்பித்துள்ளோம்.

இதனை நாம் எந்தச் சூழ்நிலையிலும் விட்டுவிட முடியாது. இதற்காக பெற்றோர்கள், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மிகுந்த அவதானத்துடனும் விழிப்புடனும் அக்கறையுடனும் தொழிற்பட வேண்டும்.

கடந்த 2021 க.பொ.த உயர்தர பெறுபேற்றுக்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை, அதிபர்களின் விடாமுயற்சி, பெற்றோர்களின் ஒத்துழைப்பு என்பன கணிசமான பங்கு வகித்தன. அதனாலேயே முதல் மூன்று இடங்களில் தமிழர் செறிந்து வாழும் மாகாணங்கள் முதல் நிலையில் வந்தன.

அதேபோன்று 2021 க.பொ.த சாதாரண தர பெறுபேற்றுக்கும் ஆசிரியர்களின் அளப்பரிய சேவை, அதிபர்களின் சீரிய மனப்பாங்கு, பெற்றோரின் வகிபாகம் என்பன காரணமாக அமைகின்றன.

தமிழர் செறிந்து வாழும் மாகாணங்களில் மாணவர்களுக்கான அரச பொதுப் பரீட்சைகளில் மாணவர்கள் எடுத்துள்ள பெறுபேற்று உயர்ச்சி எமக்கு மிகுந்த உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனை நாம் தொடர்ந்தும் தக்க வைக்க வேண்டும். இன்னும் மேலெழ வழி தேட வேண்டும். எத்தகைய நெருக்கடிகள், தலையீடுகள், கலாசாரப் பிறழ்வுகள், போதை கலாசாரங்கள், திணிப்புகள் எது வந்தாலும் நாம் அனைத்தையும் தகர்த்தெறிய வேண்டும்.

கல்வி என்பது எமது சொத்து. அதனை நாம் கெட்டியாக பற்றிக்கொள்ள வேண்டும். அதுவே எமது வாழ்வின் ஆதாரம். அதற்காக அதிபர்கள் தாம் பொறுப்பேற்றுள்ள கல்விக் காப்பகத்தின் கண்ணியத்தையும், அங்கு காக்கப்படும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு அன்போடு அரவணைப்போடு அனைவரையும் ஒன்றிணைத்து, ‘எமது இலக்கு ஒன்றே’ என்ற வாசகத்தை மனதில் இருத்தி தொழிற்பட வேண்டும் என அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். உங்களுக்கு எமது வாழ்த்துக்கள்!

ஆயிரம் சுமைகள், துன்பங்கள். பல்வேறு நெருக்கடிகளையும் தாண்டி எம் தேசத்துக் குழந்தைகள் என்ற உணர்வோடு ஆசிரியர்களான நீங்கள் ஆற்றும் பணியை அனைவரும் மதிக்கின்றனர்; வாழ்த்துகின்றனர்!

இன்னும் நாம் எமது கடந்த கால இலக்குகளை அடையவில்லை. அவை அடையப்பட வேண்டியவை. அதுவும் எமது காலத்தில் அவை அடையப்பட வேண்டும். அதற்காக எத்தகைய சவால்கள் வந்தாலும், அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு பணியாற்றுவோம்.

இறைவனின் ஆசியும், குழந்தைகளின் பெறுபேற்று வெற்றி, அவர்களின் உயர்ச்சி, அவர்கள் பெறும் பதவிகள், பட்டங்கள் என்பன உங்களுக்கு அணிகலன்களாக அமையும் என்பது உண்மை. உங்களுக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்! நாம் பல்லாண்டு காலம் கொடிய யுத்தம், அனர்த்தம் என்பவற்றைக் கடந்து வந்தவர்கள். அந்த காலங்களிலும் நாம் கல்வியைக் கைவிட்டதில்லை. அதற்காக அந்தக் காலத்தில் யாரும் தடையாக இருந்ததும் இல்லை.

இன்று தடைகளும் திணிப்புகளும் எம்மை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. தலையீடுகள் பல எமது எதிர்காலக் குழந்தைகளில் கல்வியை சீரழிக்க முனைகின்றன. அவற்றுக்கெல்லாம் நாம் இடம் கொடுக்க முடியாது. உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் உங்கள் கைகளில் மட்டுமே தங்கியுள்ளது என்பதை நீங்கள் மனதில் இருத்தி தொழிற்பட வேண்டும் என வினயத்துடன் கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

# 200 விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்!

## ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டு



மருத்துவ சேவையில் வைத்தியர்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டால் வைத்தியசாலைக்குள் போராட்டம் தோற்றம் பெறும். பொருளாதார நெருக்கடியினால் 200 விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

ஆகவே மிகுதியாக இருக்கும் வைத்தியர்களையாவது தக்க வைத்துக் கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதார பாதிப்பு மருத்துவ சேவைத்துறையில் தாக்கம் செலுத்தியுள்ளது. வைத்தியர்கள் சேவையில் இருந்து ஓய்வுபெறும் வயதெல்லையை மறுபரிசீலனை செய்யுமாறு சுகாதாரத்துறை செயற்குழு கூட்டத்தின் போது பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.

குருநாகல் வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவின் விசேட வைத்தியர்களில் இருவரும், களுத்துறை பொது வைத்தியசாலையில் இரண்டு மகப்பேற்று பிரிவு விசேட வைத்தியர்களும் சேவையில் இருந்து ஓய்வுப் பெற்றுள்ளார்கள்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு காணப்படும் பின்னணியில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை தோற்றம் பெற்றால் வைத்தியசாலைக்குள் போராட்டம் தோற்றம் பெறும், அது பாரதூரமான எதிர் விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதை அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் இருந்து சுமார் 200 விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். பெரும்பாலானோர் நாட்டை விட்டு வெளியேறும் நிலையில் உள்ளார்கள், ஆகவே மிகுதியாக இருப்பவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும்.

விசேட வைத்தியர்கள் சேவையில் இருந்து ஓய்வுபெறும் வயதெல்லை மறுபரிசீலனை செய்வது அவசியமாகும். பொருளாதாரப் பாதிப்பு மருத்துவ துறையில் தீவிரமடைந்தால் முழு நாடும் மிக மோசமாக பாதிக்கப்படும். – என்றார்.

# துமிந்தவுக்கு அமைச்சர் பதவி?



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்ததிசநாயக்கவிற்கு அமைச்சு பதவி வழங்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2023 வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதற்காக துமிந்த திசநாயக்க அரசாங்கத்துடன் உடன்பாட்டுக்கு வந்துள்ளார் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுசெயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் துமிந்த திசநாயக்க அமைச்சராக நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சக்தி அமைச்சராக அவர் நியமிக்கப்படலாம் எனவும் தயாசிறி தெரிவித்துள்ளார்.

# ஆசிரிய சேவைக்கான சம்பள அதிகரிப்பை வழங்குவதாக அரசு அளித்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன!

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு



ஆசிரிய சேவைக்கான சம்பள அதிகரிப்பை 2023 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்துவதாகவும் அரச சேவையாளர்களுக்கான 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குவதாகவும் அரசாங்கம் வாக்குறுதி வழங்கியது.

ஆனால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அந்த வாக்குறுதிகள் உள்வாங்கப்படவில்லை. நடைமுறைக்கு சாத்தியமற்ற வகையில் இந்த வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் , மாகாண சபைகள் , உள்ளூராட்சி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரச சேவையாளர்களுக்கு ஒரு சதம் கூட சம்பளம் அதிகரிக்காத வரவு – செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதம் இடம்பெறுகிறது. நாட்டுக்காக சேவையாற்றிய ஓய்வூதியலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனது இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.

அரச சேவையாளர்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதுகாக்கப்பட்டுள்ளார்கள். வரவு – செலவுத் திட்டத்தில் எவ்வித பிரச்சினைக்கும் தீர்வு முன்வைக்கப்படவில்லை. மாறாக புது பிரச்சினைகள் மாத்திரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையாளர்கள் ஓய்வுப் பெறும் வயதெல்லை தொடர்பிலும் பிரச்சினை காணப்படுகிறது. 2022 ஆம் ஆண்டுவரவுசெலவுத்திட்டத்தில் ஓய்வுப்பெறும் வயதெல்லை 65ஆக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அது 60வயதாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது இரண்டு தீர்மானங்களும் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது.

அரச சேவையாளர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை தொடர்பில் ஒருதரப்பினர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் வரை கொள்கை ரீதியில் தீர்மானங்களையும் எடுக்க வேண்டாம் என்பதை வலியுறுத்துகிறோம். கொவிட் பெருந்தொற்று காலத்தில் தனிமைப் படுத்தப்பட்ட அரச சேவையாளர்களுக்கு இதுவரை நிதியத்தின் ஊடான கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

அரச சேவையாளர்களுக்கு அரச மொழி கொள்கை கடந்த காலங்களில் கட்டாயமாக்கப்பட்டது. ஆனால் தற்போது அரச சேவையாளர்கள் அரசகரும மொழிகளில் தேர்ச்சிப் பெற்றுக் கொள்வது வியாபாரமாக்கப்பட்டுள்ளது, ஆகவே, அரசமொழிகள் திணைக்களத்தின் ஊடாக அரசசேவையாளர்களுக்கு மொழி தேர்ச்சி பாடநெறிகளைத் தொடர அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பை 2023 ஆம் ஆண்டு முதல் அதிகரிப்பதாகவும், அரச சேவையாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை 2023 ஆம் ஆண்டு முதல் வழங்குவதாக குறிப்பிடப்பட்டது, ஆனால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் அந்த வாக்குறுதிகள் தொடர்பில் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

அரச சேவையில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் நடைமுறைக்கு சாத்தியமான எந்தத் திட்டங்களும் உள்வாங்கப்படவில்லை, நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் எடுத்துள்ள திட்டங்களை விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடமிருந்து எதிர்பார்க்கிறோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடைகளுக்கான கொடுப்பனவு திட்டமொன்றை உருவாக்கவேண்டும்

## ரோஹினி கவிரத்ன கோரிக்கை



ஆசிரியர்களுக்கு சீருடைக்கான கொடுப்பனவு திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களின் தந்தையருடன் செல்வதற்காக ஆசிரியர்கள் இலகு ஆடையை கோருகிறார்கள் என அரசாங்கத்துக்கு சார்பான ஒருவர் கீழ்த்தரமான முறையில் குறிப்பிட்டுள்ளமை, ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் அவமதிப்பதாகக் கருதப்படுகிறது.

ஆகவே, இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு கோரிக்கையை முன் வைத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

மாணவர்களுக்கு சீருடை இருப்பதைப் போன்று ஆசிரியர்களுக்கு சீருடை கிடையாது. ஆனால், ஆசிரியர்கள் சேலையை சம்பிரதாயபூர்வமாக அணிகின்றனர்.

நான் ஆசிரியராக இருந்தால் சேலையையே அணிவேன். ஆனால், கீழ்த்தரமான நபரொருவர், 'ஆசிரியைகள் சேலைக்கு பதிலாக வேறு உடையை அணிய அனுமதி கோருவது பாடசாலைக்கு வரும் மாணவர்களின் தந்தையர்களுடன் செல்வதற்கு இலகுவானதாக இருப்பதற்காகவே' என்று குறிப்பிட்டுள்ளார்.

இது அனைத்து ஆசிரியர்களையும் அவமதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை பொருளாதார ரீதியில் ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மற்றையவர்களுக்கு வழங்கப்படுவதை போன்று ஆசிரியர்களுக்கும் சீருடைக்கான கொடுப்பனவொன்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன். – என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேறும் வழி தெரியவில்லை

பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்த நாடு, வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்த வழியற்ற – வகையற்ற – நிலைக்குத் தள்ளப்பட்டு ஏழு மாதங்கள் கடந்து விட்டன.

இருந்த ஜனாதிபதியும், அரசும் பதவியை விட்டு விலகி, புதிய ஜனாதிபதியும் அவரது அரசும் பதவியேற்று நான்கரை மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் பொருளாதார மீட்சிக்கான நம்பிக்கை இன்னும் பிறக்கவே இல்லை. மாறாக, அது குறைந்து வருகிறது.

இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாடு சர்வதேச நாணய நிதியத்திடம் பூரண சரணாகதி அடைந்து ஆறு மாதங்களாகப் போகின்றன. ஆனால், நாணய நிதியத்தின் மீட்புக்கான கடன் உதவி திட்டம் தயார், எனினும் அத்திசையில் விடயங்கள் முன்நகர்வதாக இல்லை.

முதலில், கடனை மீளச் செலுத்த வேண்டிய நாடுகளிடம் அந்த மீள் செலுத்துகை தொடர்பான மறுசீரமைப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வாருங்கள், அதன்பின் அவற்றின் அடிப்படையில் உதவி தொகை வழங்கலாம் என்று நாணய நிதியம் கூறிவிட்டது.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை வழங்க நாணய நிதியம் தயார், ஆனால் கடன் மீள் செலுத்துகை தொடர்பான மறு சீரமைப்புத் திட்டத்தை உரிய நாடுகளுடன் செய்வதில் இழுபறி.

இந்த நாடுகளுடன் இரண்டு சுற்றுப் பேச்சுகள் முடிவடைந்து விட்டன. மூன்றாவது சுற்றுக்கு திகதி குறிக்க முடியாமல் இலங்கை அல்லாடுகின்றது.

இந்த மூன்றாவது சுற்றுப் பேச்சு கடந்த 17ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. ஆனால் இந்தியா, சீனா உட்பட நாடுகள் அங்கு இலங்கையிடம் வழங்கக் கோரியிருந்த சில விளக்கங்களை வழங்க முடியாத நிலையில், அந்தச் சுற்றுப்பேச்சை ஒத்திவைத்து விட்ட இலங்கை அரசு, இன்னமும் பதில் கூறத் தயாராகாத நிலையில், கூட்டத்தை நடத்தாமல் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறது. இதனால் நாணய நிதியத்தின் உதவி இந்த ஆண்டில் கிட்டாது என்பது நிச்சயமாகிவிட்டது.

ஜனவரியிலாவது பெறலாம் என்றால் அதுவும் நடக்காது என்பது போன்ற நிலைமை என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

அதுதான் உண்மை நிலைமை என்றால், தொடர்ந்து நோட்டுக்களை அடித்துத் தள்ளி அரசு அதில் சீவியம் நடத்த வேண்டியதுதான். அதனால் தொடர்ந்து பணவீக்கம் எகிறி, விலைவாசி இன்னும் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசம் அடையும். அதுதான் நடக்கப் போகின்றது போலும்.

# எதிர்க்கட்சியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி இணக்கத்துடன் செயற்படுவதே எமது நோக்கு!

## அநுர பிரியதர்ஷன யாப்பா திட்டவட்டம்



எதிர்க்கட்சியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக இணக்கப்பாட்டுடன் செயற்படுவதே எமது நோக்கம். இதனை ஐக்கிய மக்கள் சக்தியுடன் நாம் இணைந்து விட்டதாகக் கருத முடியாது. பழைய சுதந்திர கட்சியை மீளக் கட்டியெழுப்புவதையே நாம் விரும்புகின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

தாம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன விலிருந்து விலகவில்லை என்றும், புதியதொரு கட்சியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை என்பதாலும் தமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் –

எதிர்காலத்தில் நாம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவோமா இல்லையா என்பதை தற்போது கூற முடியாது. எதிர்காலம் தொடர்பில் எம்மால் எதனையும் கூற முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே வெளியிட்ட அறிவித்தலே உண்மையானது. நாம் எவரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளதாக மாத்திரமே அவர்கள் அறிவித்தனர். என்னுடன் 6 பேர் சுயாதீனமாக செயற்படுகின்றனர். பொதுஜன பெரமுனவால் எம்மை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்க முடியாது.

நாம் கட்சியிலிருந்து வெளியேறவில்லை. சுயாதீனமாகச் செயற்பட்டு வருகின்றோம். வேறொரு கட்சியை உருவாக்குவதற்கும் நாம் நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறிருக்கையில் எவ்வாறு எமக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும்? பொதுஜன பெரமுனவிலிருந்து நீக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் என்பது தொடர்பில் எனக்கு துளியளவும் அச்சமில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் மீண்டும் இணையுமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. கட்சி தலைவர் இது தொடர்பில் எம்முடன் கலந்துரையாடியுள்ளார். எமது பழைய சுதந்திர கட்சியை மீளக் கட்டியெழுப்புவதையே நாம் விரும்புகின்றோம். நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை நான் விரும்புகின்றேன். மக்களுக்கு புதிய தெரிவுகளுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். – என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# மாகாண சபைத் தேர்தல் முறையிலுள்ள சட்டச் சிக்கலுக்கு தீர்வுகாண அவதானம்!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

நல்லாட்சி அரசாங்கத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான அறிக்கையை விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அவர் அதற்கு எதிராக வாக்களித்தமை நகைப்புக்குரியது. இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் இவ்வாறான சம்பவம் முன்னொருபோதும் பதிவாகவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் 154 ஆவது அத்தியாயத்தின் (டி) பிரிவில் 'மாகாண சபை தேர்தல் நடத்தப்படாத பட்சத்தில் குறித்த மாகாணத்தின் மாவட்ட உறுப்பினர்களை ஒன்றிணைத்து நாடாளுமன்ற சபை என்ற அடிப்படையில் மாகாணத்தின் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வு தொடர்பாக ஆராயலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய செயற்பட தயாராயின் அது தொடர்பில் அவதானம் செலுத்தலாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, விளையாட்டுத் துறை, இளைஞர் விவகாரத்துறை அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரச நிர்வாகம் இலங்கையின் முதலாவது அமைச்சாகும். சோல்பரி அரசமைப்பில் அரச சேவைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. கால பரிமாற்றத்துக்கமைய அரச சேவை நாட்டுக்கு முக்கியமானது என்ற தீர்மானம் கொள்கை ரீதியில் எடுக்கப்பட்டது. அரசமைப்பின் முதலாம் மற்றும் இரண்டாம் குடியரசு யாப்பில் அரச சேவை தொடர்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டாம் குடியரசு யாப்பு 21 முறை சீர்த்திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்தை பிரதான கேந்திரமாக கொண்டு அரச சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரச சேவை வினைத்திறனகாகவும், இலகுவானதாகவும் காணப்பட வேண்டும் என்பது நாட்டு மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் 9 மாகாண சபைகள் நாட்டின் அதிபதியாக உள்ளன. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளுக்கான நிதி நாடாளுமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பிரதிநிதியால் மாகாண சபைகளின் நிர்வாகம் தற்போது இயக்கப்படுகின்றன. அரசசேவையை வினைத்திறனாகவும், துரிதமாகவும் முன்னெடுக்க புதிய செயற்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரச சேவை மாத்திரமல்ல, தனியார் சேவைகளை வினைத்திறனாக்க வேண்டுமாயின் சேவைத்துறை கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அரச சேவை கட்டம் கட்டமாக மறுசீரமைக்கப்படும். அரசசேவை காலத்தின் தேவைக்கமைய மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

நாட்டில் 14 லட்சத்துக்கும் அதிகமான அரச சேவையாளர்கள் உள்ளார்கள். நெருக்கடியான சூழ்நிலையில் அரச சேவையை மறுசீரமைப்பு எவரும் பாதிக்கப்படாத வகையில் சேவைத் துறையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். மறுபுறம் 14 ஆயிரத்து 22 கிராமசேவகர் பிரிவு ஊடாக வழங்கப்படும் சேவைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். தற்போதைய தரப்படுத்தலுக்கமைய அரச சேவையில் இருந்து ஓய்வுப் பெற்ற 6 லட்சத்து 75 ஆயிரம் பேர் மாத ஓய்வூதிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். பொருளாதாரப் பாதிப்பால் இவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு தொடர்பில் சிக்கல் எழுந்துள்ளது, இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் தீர்க்கமான தீர்மானம் எடுக்கப்படும்.

நாடு என்ற ரீதியில் மிக நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, நிதி நெருக்கடிக்குத் தீர்வு கண்டால் எந்தப் பிரச்சினையும் தோற்றம் பெறும். அரச சேவையில் நிதி செலவுகளைக் கட்டுப்படுத்த விசேட சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளது. ஒருசில தீர்மானங்கள் சாதகமாகக் காணப்படுகின்றன.

சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளை மேம்படுத்த மாவட்ட அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி குழு தற்போது நியமிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரச சேவையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாகாணங்களும், மாவட்டங்களையும் ஒன்றிணைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மாகாண சபையும், மாவட்டத்தையும் ஒன்றிணைத்து செயற்படும் போது அரச செலவுகளை இயலுமான அளவு குறைத்துக்கொள்ளலாம். இருப்பினும் அரச செலவுகளை அதிகரிக்க அனைவரும் நாட்டம் கொள்வதால் அது தொடர்பாக இதுவரை எவரும் அவதானம் செலுத்தவில்லை.

மாகாண சபை தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கான காரணத்தை அனைவரும் நன்கு அறிவார்கள்.

மாகாண சபை தேர்தல் முறைமையை திருத்தம் செய்யும் நோக்கில் கடந்த அரசாங்கம் தேர்தல் முறைமையில் சிக்கல் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மாகாண சபை தேர்தல் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் எடுக்கும் தீர்மானம் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை ஆரம்பத்தில் இருந்து சுட்டிக்காட்டினோம்.

நல்லாட்சி அரசாங்கத்தில் மாகாண சபைகள் தேர்தல் முறைமை தொடர்பான பிரேரணையை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்த அமைச்சர் எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களித்தார்.

இதுபோன்ற நகைச்சுவையான செயற்பாடு இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முன்னொரு போதும் பதிவு செய்யப்படவில்லை. மாகாண சபை தேர்தல் முறைமைக்கு ஏற்படுத்திய சிக்கல் நிலைக்கு இதுவரை தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தல் முறையில் உள்ள சட்டச்சிக்கலுக்கு தீர்வு காண அவதானம் செலுத்தப்பட்டு, ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம், ஆகவே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முறைமையில் காணப்படும் பிரச்சினைக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். செலவுகளைக் குறைக்கும் வகையில் தேர்தல் முறைமை மாற்றியமைக்க வேண்டும்.

14 ஆயிரத்துக்கும் அதிகமான கிராம சேவகர் பிரிவு பிறிதொரு சவாலாக காணப்படுகிறது, கிராம சேகவர் பிரிவுகளின் சேவைகளை ஒருமுகப்படுத்துவது தொடர்பாக ஆரம்பக்கட்டப் பேச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச சேவையில் இருந்து ஓய்வுபெறுவதற்கும், வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்கும் தற்போது வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களை விரிவுபடுத்தும் நோக்கம் கிடையாது. மன்றங்கள், சபைகள் விஸ்தரிக்கப்படும் போது அதன் சுமைகளையும் நாட்டு மக்களே எதிர்க்கொள்ள நேரிடும். ஆகவே ஒருசில பிரதேச சபைகள் ஒன்றிணைக்கப்படும்.

உள்ளூராட்சின்ற சபை தொடர்பாக ஆராய எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்ற சபைத் தேர்தல் கடந்த மார்ச் மாதம் பிற்போடப்பட்ட போது எவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தற்போது சிறந்த மாற்றம் நோக்கி செல்லும் போது எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

மாகாண சபை தேர்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.சட்ட சிக்கலுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் 154 ஆவது அத்தியாயத்தின் (டி) பிரிவில் 'மாகாண சபை தேர்தல் நடத்தப்படாத பட்சத்தில் அந்த மாகாணத்தின் மாவட்ட உறுப்பினர்களை ஒன்றிணைத்து நாடாளுமன்ற சபை என்ற அடிப்படையில் மாகாணத்தின் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வு தொடர்பாக ஆராயலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது, மாகாண சபை தேர்தல் இடம் பெற்றதன் பின்னர் இந்த விதிவிதானம் நீக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது,ஆகவே மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் அவதானம் செலுத்தினால் அவ்வாறு செயற்படலாம். – என்றார்.




# தமிழர்களின் நிலைகுறித்து உலகம் எவ்வாறு சிந்திக்கும் என்பதை அரசு ஆராய வேண்டும்

## டலஸ் அழகப்பெரும கோரிக்கை



தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் பிற்போட்டால் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகள் தோற்றம் பெறும் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. தமிழர்களின் அரசியல் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட மாகாண சபை தேர்தல் இல்லாமல் உள்ள நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டால் தமிழர்களின் நிலை தொடர்பில் உலகம் எவ்வாறு சிந்திக்கும் என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும் என நாடராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் , உள்ளூராட்சி விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரத் துறை அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு தற்போதைய ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் பொறுப்புக் கூற வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் செயற்படுவது பாரிய குறைபாடாகக் கருதப்படுகிறது.

1931 ஆம் ஆண்டு அரச நிர்வாக கட்டமைப்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் விடயதானத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவையாளர்கள் தற்போது சேவை கட்டமைப்பில் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் பரிந்துரைகளின் ஒருசில விடயங்கள் அரச சேவையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் காணப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மாகாண சபைகள் திருத்த பிரேரணை கொண்டு வரப்பட்ட போது தெரிவுக் குழுவின் போது 31 திருத்தங்கள் உள்வாங்கப்பட்டன. மாகாண சபை தேர்தல் காலவரையறையில்லாமல் பிற்போடப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் என்ற சொல் கூட தற்போது வழக்கில் இல்லை. இது ஒரு பாரியதொரு ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடாகும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைப் பிற்போட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய அண்மையில் தெரிவு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் 2018 ஆம் ஆண்டு விசேட தெரிவு குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திலும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் தேர்தல் முறைமை தொடர்பான தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது, கலப்பு தேர்தல் முறைமைக்கு அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். இவ்வாறான பின்னணியில் மீண்டும் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய தெரிவு குழுவை ஸ்தாபிப்பது எத்தன்மையானது.

ஆகவே, மாகாண சபைகளுக்கு செய்ததை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கும் செய்ய வேண்டாம் என்பதை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் மீதான அச்சத்தில் முறையற்ற வகையில் செயற்பட வேண்டாம் என்பதை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளூராட்சிமன்ற சபை முறைமை தொடர்பில் எவ்வித கொள்கையும் நடைமுறையில் இல்லை, 2012 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றங்கள் தொடர்பான கொள்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, ஆனால் இதுவரை அந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் தேர்தலை உரிய காலத்தில் நடத்தி நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்திய தலைவர்கள் இந்த சபையில் உள்ளார்கள். தேர்தல் புறக்கணிக்கப்படும் போது அது ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் காணப்படுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் குறைந்தளவில் உள்ளார்கள். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் அரசியல் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபை தேர்தல் எப்போது நடத்தப்படும் என குறிப்பிடப்பட முடியாத நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் பிற்போடப்பட்டால் தமிழ்களின் நிலை தொடர்பாக உலகம் என்ன குறிப்பிடும் என்பது தொடர்பில் அரசாங்கம் அவதானத்துடன் செயற்பட வேண்டும் . - என்றார்.





# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

## ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |


SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# நினைத்துப் பார்க்க வேண்டிய பெருமகன் பொன். இராமநாதன்



- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

பிறந்த பிறப்பினைப் பயனுடையதாக்கி சமூகத்தால் இன்று வரை போற்றி மதிக்கப்பட்டு கௌரவிக்கப்படும் நிலையில் ஒரு பெருமகன் வாழ்ந்தார். அவரை நினைத்துப் பார்ப்பது மிகவும் அவசியமேயாகும். அப்படி நினைத்துப் பார்க்க வேண்டிய பெருமகானார்தான் ஈழத்தின் சொத்தாகிய பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்.

தலைநகரம் கொழும்பில் பிறக்கின்றார். கற்றறிந்தவர்கள் குடும்பம். வசதிகள் நிறைந்த குடும்பம். செல்வாக்கு மிக்க குடும்பம். வசதிகள் நிறைந்து இருந்தும் – கல்வியைக் கருத்தில் கொண்ட குடும்பமாக அவரின் குடும்பம் இருந்தது. வசதிகள் நிறைந்தால் அதில் மூழ்கி, அதனை அனுபவித்து, வாழ்வினை வாழ்பவர்கள் பலர் இருப்பதையே காணமுடிகிறது. ஆனால் பொன். இராமநாதன் வசதிகளைப் பெற்றிருந்தும் வாழ்க்கைக்குக் கல்விதான் சிறப்பினை அளிக்கும் என்ற நிலையில் – கல்வியைக் கண்ணாய்க்கருதி இலங்கையிலும் கற்றார். இந்தியாவிலும் கற்றார்.

அன்னைத் தமிழினை அரவணைத்தார். ஆங்கிலத்தைக் கற்றார். சைவத்தைப் போற்றினார். வேத, உபநிடதம், நிறைந்த வடமொழியையும் கற்றார். சிங்களம், கிரேக்கம், லத்தீன் எனப் பல மொழிகளையும் கற்றவராகவும் விளங்கினார். சட்டம் பயின்றார். கூடவே தத்துவமும் பயின்றார். அவரின் சிந்தனை, செயற்பாடுகள் யாவும் பரந்து விரிந்தனவாகவே அமைந்தன. கற்ற கல்வியையும் , பெற்ற பதவியையும் – சமூகத்துக்குப் பயனுடையதாக்கிட வேண்டும் என்னும் உயரிய உன்னத எண்ணமே அவரிடம் குடிகொண்டிருந்தது என்பதால்தான் அவரை நினைத்துப் பார்ப்பது அவசியமாயிருக்கிறது.

பொன். இராமநாதனுடைய காலம் 1851 – 1930 ஆண்டுகளாகும். அவர் அறியும் வண்ணம் அவருக்கு முன்பாக நல்லைநகர் நாவலர் பெருமான், வள்ளலார், இராமகிருஷ்ண பரமஹம்சர், ஷீரடிபாபா ஆகியோரும் – அவருக்குப் பின்னால் இரவீந்திரநாத் தாகூர், சுவாமி விவேகானந்தர், காந்திஜி , அரவிந்தர், ரமண மகிரிஷி, பாரதியார், சுவாமி விபுலானந்தர் ஆகியோரும் வருகின்றார்கள். இவர்கள் அனைவருமே சமூகத்தை நேசித்தவர்கள். கல்வியையும் நேசித்தவர்கள். அதே வேளை கல்வியினை ஆன்மீகத்துடன் இணைத்தே பார்த்தவர்கள் என்பதுதான் மிகவும் முக்கியமாகும். ராஜாராம் மோகன்ராய் இந்தியாவில் துணிந்து சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர். அவரால் அக்காலத்தில் சமூகத்தில் பல புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட வழி ஏற்பட்டது. ஆனால் அவர் பொன். இராமநாதன் பிறக்க முன்பே மறைந்து விட்டார்.

தமிழ்நாட்டில் இருந்த பெரியார்களின் தாக்கம் பொன். இராமநாதனையும் பற்றியிருக்கும் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. இராமநாதனின் கல்வி சென்னையில் இடம் பெற்ற காரணத்தால் அவரின் இளம் மனதில் பல நல்ல கருத்துக்கள் அதாவது ஆன்மீகம் சம்பந்தமான கருத்துக்கள் வேரூன்றின எனலாம். அந்தக் கருவானது பின்னர் அவரின் சிந்தனையையும், செயலையும், சிறப்பாக்கிடத் துணையாக இருந்தது என்பது மறுப்பதற்கில்லை.

அதே வேளை இராமநாதனை ஒருவர் உற்று உற்று நோக்கியபடி இருந்தார். இராமநாதனால்தான் தான் விரும்பிய விடயங்கள் சிறப்பாய் நிறைவேறும் என்றும் நம்பினார். அதனால் இராமநாதனை அவரின் கை சுட்டிக் காட்டியது. இராமநாதனை வருங்கால விடி வெள்ளியாய் கண்டவர், கையினால் சுட்டிக் காட்டியவர் வேறு யாருமல்லர். எங்களின் நல்லைநகர் நாவலர் பெருமான்தான். நாவலர் பெருமான் தான் கண்ட கனவை நனவாக்கிட யார் வருவார் என்று ஏங்கியபடி இருந்தார். அவரின் கனவினை நனவாக்க வந்து நின்றார் பொன். இராமநாதன். நாவலர் பெருமானின் எண்ணங்களை வண்ணங்களாக்கி நிற்கும் வகையில் இராமநாதன் விளங்கினார் என்பதை யாவருமே ஒத்துக் கொள்ளுவார்கள்.


சைவத்தைத் தலைமேற் கொண்டார் நாவலர் பெருமான். அதேவேளை தமிழையும் தலைவணங்கி நின்றார். ஒழுக்கத்தை உயிராக எண்ணினார் நாவலர். இவையனைத்தும் இணைந்த கல்வியையும் கொடுக்க வேண்டும் என்று பேராவலும் கொண்டார். அவரின் காலத்துச் சூழலுக்கு ஏற்ப அவரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. நாவலர் பெருமான் தான் எடுத்துக் கொண்ட முயற்சியைச் செவ்வனவே செய்தார். செய்வதில் உறுதியும் கொண்டு விளங்கினார். தான் தொடங்கிய இந்த உன்னதமான பணியினைச் சுமந்து செல்வதற்கு உரிய ஒருவரை நாவலர் பெருமான் தேடியபடியே இருந்திருக்கிறார். தேடிக் கண்டு கொண்டேன் என்பது போல அவரின் தேடலாய் வந்து நின்றவராய் பொன். இராமநாதன் வந்தமைகிறார் என்பதுதான் உண்மையாகும்.நாவலர் பெருமான் மரபின் வழியில் பொன். இராமநாதன் வந்து அமைகிறார் என்பதை மறுத்துரைத்து விடல் முடியாது.

கண்ணுடையர் என்போர் கற்றோர் , கற்கக் கசடறக் கற்க ,கற்றதனால் ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழல் – இவை அனைத்தையும் அகத்தில் அமர்த்தினார் நாவலர் பெருமான். இதனையே இராமநாதனும் இருத்தினார் தன்னகத்தில் என்பதுதான் உண்மையாகும்.

கல்வியைக் கொடுக்க வேண்டும். அதுவும் ஆன்மீகம் கொண்ட கல்வியாய் அமைதல் வேண்டும் என்பதுதான் பொன். இராமநாதனின் எண்ணமாய் இருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டே அவரால் மேற்கொள்ளப்பட்ட கல்வி தொடர்பான,கற்பித்தல், தொடர்பான திட்டங்கள் அனைத்தும் செயற்படுத்தப்பட்டன என்பதைத்தான் காணுகின்றோம். இந்தியாவில் கல்வியைக் கற்றதன் பயன்தான் ஆன்மீகம் நாட்டத்துக்கு வழிவகுத்தது எனலாம். சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் வழிகாட்டல், சுவாமி அருட்பரானந்தாவின் சந்திப்பு , சென்னையில் கிடைத்த அனுபவம், தமிழ்நாட்டில் வாய்த்த ஆசிரியர்கள், நட்புகள், அனைத்துமே இராமநாதனின் ஆன்மீக நாட்டத்துக்கு பெரு வலுவூட்டின. வசதிகள், வாய்ப்புகள், எல்லாமே வாய்த்திருந்தும் இராமநாதன் பிற்காலத்தில் ஒரு ஞானியாகவே தனது வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொண்டார். இதற்கு அடிப்படையே அவரின் அகத்தில் ஆழமாகப் பதிந்திட்ட ஆத்மீகம்தான்.

சைவம் தழுவிய ஒழுக்கமான கல்வியையே இராமநாதன் விரும்பினார். அந்தக் கல்வியூடாக நல்லதொரு சமூகம் உருவாகும் என்றும் அவர் நம்பினார் .அப்படியான கல்வியியைப் பெண்களுக்கு வழங்க வேண்டும் என்று சிந்தித்து அதனைச் செயற்படுத்தியும் நின்றார். இல்லம் சிறக்க பெண்களே முக்கியம் என்பதை முழுதாக இராமாநாதப் பெருமகன் மனத்தில் பதித்து வைத்திருந்தார். அந்தப் பெண்கள் கல்வி கற்றவராகவும், சமய, ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், தமிழ்ப்பற்று மிக்கவராகவும் இருக்க வேண்டும் என்றும் பெரிதும் ஆசைப்பட்டார். அந்த நல்லாசையினால் எழுந்ததுதான் 1913 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாள் தோற்றம் பெற்ற மருதனார்மடம் மகளிர் கல்லூரியாகும்.இன்று அக்கல்லூரி இராமநாதன் மகளிர் கல்லூரி என்னும் மகுடத்துடன் கல்வி கற்றிட விழையும் பெண்களுக்கெல்லாம் பெரும் பொக்கிஷமாய் திகழ்கிறது. பெண்களுக்கான கல்லூரியினை நிறுவியதோடு – சைவத்தமிழைப் போதிக்கும் ஆசியர்களை உருவாக்கும் பயிற்சியையும் இங்கு ஏற்படுத்திக் கொடுத்தார் என்பதும் நோக்கத்தக்கது.

யாழ்மண்ணில் சைவத் தமிழ் பரப்பிட ஆன்மீகச் சிந்தனை மிகுந்த பொன். இராமநாதனால் முதலில் தொடக்கப்பட்டது பெண்களுக்கான கல்லூரியேயாகும். யாழ்மண்ணில் ஆண்களுக்காகவே பல பாடசாலைகள் தொடங்கப்பட்டன. இந்துக் கல்லூரிகள் தொடங்கப்பட்டாலும் அவையும் ஆண்களை மையப்படுத்தியே தொடங்கப்பட்டன. இதனை மனங் கொண்ட காரணத்தால்தான் சைவத் தமிழ்க் கல்லூரியைப் பெண்களுக்கு அமைத்திட வேண்டும் என்னும் எண்ணம் வள்ளல் இராமநாதன் உள்ளத்தில் முதலாவதாக எழுந்தது. அதுவே இராமநாதன் மகளிர் கல்லூரியாய் மலர்ந்தது.



பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் சைவத் தமிழ் பண்பாட்டில் வளரவேண்டும் என்று வள்ளல் இராமநாதன் ஆசைகொண்டார். அவரின் ஆசை திருநெல்வேலியில் பரமேஸ்வரன் பெயரினைத் தாங்கிய கல்லூரியாக 22.08.1921 ஆரம்பிக்கப்பட்டது. சைவத் தமிழ்ப் பண்பாட்டுடனான கல்வி இங்கு வழங்கப்பட்டது என்பதுதான் மிகவும் முக்கியமாகும். இங்கு கற்பித்த ஆசியர்கள் – சிறந்த தகுதியுடையவராயும், ஒழுக்க சீலர்களாகவும், ஆன்மீகச் சிந்தனை மிக்கவர்களாகவும் விளங்கினார்கள்.

வள்ளல் இராமநாதனைவிட மூத்தவர் நாவர் பெருமான். வயதாலும் மூத்தவர். வாண்மையாலும் மூத்தவர். அந்த மூத்தவர் மனத்துதித்த சிந்தனைகளைச் செயலாக்குவதில் இராமநாதன் அவர்கள் முன்னின்றார் என்பதுதான் முக்கியம். கற்றவர்களைப் பயிற்றுவிப்பதும், பட்டமளித்து சமுதாயத்தில் அவர்களையும், தமிழ்க் கல்வியினையும்,உயர்த்துதல் வேண்டும் என்பது நாவலர் பெருமானின் மனத்துதித்த பேரெண்ணமாகும். அதனை தன்னுடைய அகத்திருத்தி அதற்குச் செயல் வடிவம் கொடுக்கு முகமாக – திருநெல்வேலியில் அமைந்த கல்வி வளாகத்தினுள்ளே – தமிழ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பண்டிதர்களுக்கான பயிற்சியினை நல்கிடும் கலாசாலை ஆகியவற்றை அமைத்து நாவலர் பெருமானின் பேரார்வத்தை நிறைவேற்றி வைத்தார்.

நாவலர் பெருமான் கல்விக்கூடங்களை நிறுவும் பொழுது ஆலயத்தையும் அங்கு அமைத்தார். அவ்வழியில் இராமநாதனும் தான் நிறுவிய கல்விச் சாலைகளில் ஆலயம் அமைத்து அறிவுடன் அருளும், ஆன்மீகம் இணைந்துவிடச் செய்தார். இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி இரண்டிலும் எம்பெருமான் ஆலயங்கள் அமைந்திருப்பதை நாம் காணுகிறோம். கற்பது மட்டுமல்ல அதனுடன் கடவுளைப் பற்றியும் எண்ண வேண்டும். கல்வியின் பயன் கடவுளைத் தெரிந்து கொள்ளுவது. படித்தால் மட்டும் போதுமா? படைத்தவனை மறந்திடும் கல்வியால் பயனில்லை என்னும் எண்ணம் வள்ளல் இராமநாதன் மனத்தில் நிறைந்தே இருந்தது. இப்படி இருந்ததற்கு நாவலர் பெருமானும் ஒரு முக்கிய தூண்டுகோல்.

நாவலர் பெருமான் ஈழத்திலும் இந்தியாவிலும் சைவப் பிரசங்கங்கள் செய்து தன்னை அடையாளப்படுத்தினார். பொன்னம்பலம் இராமநாதன் இங்கிலாந்து, அமெரிக்கா , இந்தியா, போன்ற இடங்களில் எல்லாம் சென்று தன்னுடைய ஆற்றலுடை வார்த்தைகளால் ஆன்மீகக் கருத்துக்களையெல்லாம் கேட்பார் பிணிக்கும் வண்ணம் வழங்கி பயனுறச் செய்தார். அவரிடம் காணப்பட்ட பன்மொழி ஆற்றல், அவரிடம் அமைந்திருந்த தத்துவ நாட்டம், அவரிடம் அமைந்திருந்த தன்னொழுக்கம் அத்தனையும் அவரை இன்றும் நினைத்துப் பார்க்க வைத்திருக்கின்றன.

உயர்ந்த குறிக்கோளுடன் அவரால் தொடங்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி இன்று உயர் கல்வியினைக் கொடுத்திடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக ஆகியிருக்கிறது. பெண்களுக்காக அமைக்கப்பட்ட இராமநாதன் மகளிர் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடமாய் மிளிர்ந்து நிற்கிறது. சைவசித்தாந்தம், இந்துக் கலாசாரம், சமஸ்கிருதம், தமிழ் மொழி, அத்தனையையும் அளிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – பண்பாட்டுப் பல்கலைக்கழகமாகவே திகழ்கிறது. இராமநாதன் கண்ட கனவினை நனவாக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வளர்ந்து வருகிறது.

கல்வியொடு நிற்காமல் – காலங்காலமாய் நிலைத்து நின்றிட, எங்கள் சைவம் காத்திட , ஆகம முறைப்படி ஒழுங்காகப் பூஜை நிகழ்ந்திட, வேதமும் , திருமுறையும், முறையாய் ஒலித்திட, தலைநகராம் கொழும்பில் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் சான்றாகி நிற்கிறது.இந்த ஆலயம் ஒரு கலைக் கூடம். கருங்கல்லினாலாகிய கலைக்கூடம். தென்னிந்தியக் கோவில்களுக்கு நிகராக நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் இதுவாகும். இதுபோன்றதொரு ஆலயத்தை இலங்கையில் எங்குமே காணவே முடியாது.


அரசாங்கத்தில் உயர்பதவியை அலங்கரித்தவர். அரசாங்க சபையில் உறுப்பினாராக இருந்தவர். ஆட்சியாளர்களால் பெரிதும் மதிப்பட்டவர். ஒரு காலத்தில் ஆடம்பரமாய் வாழ்ந்தவர். அறிஞர். எழுத்தாளர். பேச்சாளர். ஆனாலும் பொன்னம்பலம் இராமநாதன் உள்ளத்தில் ஆன்மீகம் என்னும் உணர்வு எப்படியோ எழுந்து விட்டது. அந்த ஆன்மீக உந்தலால் அவரிடம் காணப்பட்ட ஆடம்பரம் அத்தனையும் அகன்றது. ஆண்டவனின் நினைப்பும், அறவழி நாட்டமும், அவரின் நிறைவில் நிறைந்தே இருந்தது. குறை குடமாக இருக்காமல் நிறை குடமாகவே அவர் காணப்பட்டார். அவரின் வாழ்வும் வளமான வாழ்வாகவே அமைந்தது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவராய் பொன்னம்பலம் இராமநாத வள்ளல் விளங்குவதால் அவரை யாவருமே நினைத்துப் பார்க்க வேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நுட்பியல் அவத்தை

## பூகம்ப முன் எச்சரிக்கை தொழில்நுட்பம்

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





கடந்த வாரம் பூகம்பம் காரணமாக இலங்கையில் சுனாமி முன்னெச்சரிக்கை விடப்பட்டது நாம் அறிந்த விடயம். இந்த முன்னெச்சரிக்கை எவ்வாறு முன்னறியப்பட்டு எச்சரிக்கப்பட்டது, அதற்கான நுட்பியல் அவத்தை என்ன என்பதை இந்தத் தொடரில் பார்க்கலாம்.

பூமி நடுங்குவதை நீங்கள் எப்போதும் உணராமல் இருக்கலாம், ஆனால் கலிபோர்னியாவில் எப்போதும் நிலநடுக்கம் ஏற்படுகிறது. நில அதிர்வு வலையமைப்புகள் பூகம்பங்களை அவற்றின் அளவு, ஆற்றல் வெளியீடு மற்றும் தீவிரம் ஆகியவற்றால் அளவிடுகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்பு, அனைத்து அளவுகளும் பதிவுசெய்யப்பட்ட அலைவடிவ நீளம் அல்லது நில அதிர்வு அலையின் நீளத்தின் அடிப்படையில் அளவிடப்பட்டன.

பூமி நடுங்கும்போது, பூகம்பங்கள் நில அதிர்வு அலைகள் வடிவில் ஆற்றலைப் பரப்புகின்றன. நில அதிர்வு வரைவி முதன்மையான பூகம்பத்தை அளவிடும் கருவியாகும். நில அதிர்வு அலைகளால் ஏற்படும் தரை இயக்கத்தின் டிஜிற்றல் கிராஃபிக் பதிவை நில அதிர்வு வரைபடம் உருவாக்குகிறது. டிஜிற்றல் பதிவு நில அதிர்வு வரைபடம் என்று அழைக்கப்படுகிறது.

பூமி பல அடுக்குகளால் ஆனது, அவற்றில் சில மேன்டில்ஸ் ( mantles) என்று அழைக்கப்படுகின்றன.





வெளிப்புற அடுக்கு லித்தோஸ்பியர(lithosphere) என்று அழைக்கப்படுகிறது, மேலும் லித்தோஸ்பியரின் வெளிப்புற அடுக்கு மேலோடு ஆகும், இதில் தான் நாம் நிற்கிறோம். tectonic plates லித்தோஸ்பியரின் ஒரு பகுதியாகும். இந்த தட்டுகள் தொடர்ந்து நகரும் மற்றும் ஒன்றோடொன்று உரசும். சில நேரங்களில், சக்தி மற்றும் உராய்வு போதுமான அளவு மோசமாகி பூகம்பத்தை ஏற்படுத்தும். பூமியின் மேற்பரப்பிற்குக் கீழே நிலநடுக்கத்தைத் தகடுகள் சந்திக்கும் குறிப்பிட்ட இடம் hypocenter என்று அழைக்கப்படுகிறது. மையப்பகுதி என்பது ஹைபோசென்டருக்கு நேரடியாக மேலே உள்ள மேலோட்டத்தின் இருப்பிடமாகும்.

இது நிகழும்போது, seismographs கருவியில் பதியப்படுகின்றன, எச்சரிக்கப்படுகின்றன. நில அதிர்வு வரைபடம் என்பது நிலநடுக்கங்களின் அளவைப் பதிவுசெய்து தீர்மானிக்கும் உணரிகளின் குழுவாகும்.

1970 முதல், Moment Magnitude Scale நில அதிர்வை அளவிடப் பயன்படுத்தப்படுகிறது, ஏனெனில் இது பூமி முழுவதும் நிலநடுக்கத்தைக் கண்டறிகிறது.

நில நடுக்கம் மற்றும் அதன் சக்தி அதனால் ஏற்படும் சேதத்தின் வலிமையைப் பற்றிய சிறந்த அறிவைப் பெற, உலகளாவிய நில அதிர்வு அலைகளைப் படம்பிடிக்க Moment Magnitude Scale உருவாக்கப்பட்டது. இது பூகம்பத்தின் தீவிர அளவுகள் பூமியின் மேற்பரப்பு, மனிதர்கள் மற்றும் நிலநடுக்கத்தின் வௌ;வேறு இடங்களில் உள்ள கட்டிடங்களின் மீது பூகம்பத்தின் தாக்கத்தின் தீவிரத்தை விவரிக்கிறது.

1935 முதல் 1970 வரை, பூகம்ப அளவு ரிக்டர் அளவுகோலாக இருந்தது, இது நிலநடுக்க அளவுகளை ஒப்பிட நில அதிர்வு நிபுணர் சார்லஸ் ரிக்டரால்


NATIONAL TSUNAMI EARLY WARNING CENTER


EARTHQUAKE INFORMATION BULLETIN

THE PEOPLE THOSE WHO ARE LIVING NEAR AND ALONG THE COASTAL AREAS AROUND THE ISLAND

PLEASE BE AWARE!


| | |
|---|---|
| அளவு / Magnitude | [illegible] |
| ஆழம் (கி.மீ) / Depth (km) | 10 |
| திகதி / Date | 18/11/2022 |
| இடம்பெற்ற நேரம் / Origin Time | 07:07 PM |
| அகலாங்கு / Latitude | [illegible] |
| நெட்டாங்கு / Longitude | [illegible] |
| அமைவிடம் / Location | South of Sumatra |


கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கணித சூத்திரமாகும். பின்னர், ரிக்டர் அளவுகோல் மாற்றப்பட்டது, ஏனெனில் இது பெரும்பாலும் தெற்கு கலிபோர்னியாவில் நிலநடுக்கங்களுக்கு வேலை செய்தது, மேலும் 370 மைல்களுக்குள் நடைபெறும் நில அதிர்வை, ஒரு வகை பூகம்ப அலைக்கு மட்டுமே அளவு கணக்கிடப்பட்டது. இது பின்னர் Moment Magnitude Scale (MMS) மாற்றப்பட்டது, இதன் பின்னர் உலகம் முழுவதும் நில அதிர்வை அனைத்து வெவ்வேறு நில அதிர்வு அலைகளையும் பதிவு செய்கிறது. ரிக்டரின் சமன்பாடுகள் எதிர்கால பூகம்பங்களை முன்னறிவிப்பதற்கும் பூகம்ப அபாயங்களைக் கணக்கிடுவதற்கும் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன.




இன்று, நிலநடுக்க அளவு Moment Magnitude Scale (MMS) அடிப்படையாக கொண்டது. இது பாறையின் இயக்கத்தை அளக்கிறது. இது பெரிய பூகம்பங்களை துல்லியமாக அளவிடுகிறது. இதில், Richter magnitude (ML), body wave magnitude (Mb), surface wave magnitude (Ms)ஆகிய அளவீடுகளும் உள்ளடங்கியுள்ளன.

பூகம்பங்கள் அவற்றின் அளவைப் பொறுத்து சிறியது முதல் பெரியது, மிகப் பெரியது வரை வகைப்படுத்தப்படுகின்றன. லேசான மற்றும் மிதமான நிலநடுக்கத்திற்கும் மிகப்பெரியதிற்கும் இடையிலான அளவுகள் வித்தியாசப்படுகின்றன. நலிவான பூகம்பம் என்பது 3.0 அளவு உட்பட்டது இது பெரும்பாலும் உணரப்படமுடியாததாகும். 3.0 மற்றும் 3.9 க்கு இடையேயான அளவுகளுக்கு 'சிறியது' என்று வரையறுக்கிறார்கள், 4.0 – 4.9 மிதமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவாகும். 5.0 – 5.9 இடைநிலைப்பட்ட பூகம்பம் என வரையறுக்கப்பட்டுகிறது. மேலும் 6.0 – 6.9 அளவு வலுவான பூகம்பமாக வரையறுக்கப்படுகின்றது. 7.0 – 7.9 அளவு பூகம்பம் பெரியளவிலானதாகக் கருதப்படுகின்றது. மேலும் 8.0 க்கும் அதிகமான அளவுகளில் 'மிகப் பெரியது' என்று முடிவடைகிறது, இதில் குறிப்பிடத்தக்க சேதம் எதிர்பார்க்கப்படுகிறது. 2004 ஆண்டு 8.5 அளவிலான பூகம்பம் சுமத்திராத் தீவுகளில் ஏற்பட்டதால் உருவான சுனாமி அலைகள் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளைத் தாக்கி பாரிய மனித உயிரிழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தது.





Intesnity Vs Magnitude of Earthquake

# இந்திய - அமெ.இரு தரப்பு உறவுகள் ஆழமான அர்த்தங்கள் பொதிந்தவை!

## வெள்ளை மாளிகை துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இந்தியா ஹவுஸின் பண்டிகைக் கால நிகழ்வில் பெருமிதம்



இந்தியா மற்றும் அமெரிக்காவின் தலைமை இருதரப்பு பங்காளிகளாக 'வலுவான மற்றும் இன்றியமையாதனவாக' தங்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அடிக்கடி வலியுறுத்தி வருகின்றன.

அமெரிக்காவின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் ஃபைனர், அடுத்த ஆண்டில் இந்தியா – அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவதற்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் குறித்து சமீபத்தில் கருத்து தெரிவித்தார். அவர், இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மையில் இந்த ஆண்டு குறிப்பிடத்தக்கதாக உள்ளது என்பதையும் எடுத்துரைத்தார்.

வொஷிங்டனில் உள்ள இந்தியா ஹவுஸில் பண்டிகைக் காலத்துக் கொண்டாட்டத்தை ஒட்டிய மதிய உணவு வரவேற்பில் பேசிய ஃபைனர், 2022 மிகவும் சாதனை படைத்த ஆண்டாகும். மேலும் வரவிருக்கும் ஆண்டு இன்னும் பெரிய ஆண்டு என்பது இந்த உறவு பல தசாப்தங்களாக எவ்வாறு தொடர்கிறது என்பதற்கான அடையாளமாகும்.

"வெள்ளை மாளிகையில் உள்ள நாங்கள், முழு நிர்வாகமும் – நிச்சயமாக ஜனாதிபதி பிடெனும் – இதை உலகில் எங்கும் அமெரிக்காவுடனான மிகவும் விளைவான உறவுகளில் ஒன்றாகக் காண்கிறோம். ஆனால் தொடர்ந்து பரிணாம வளர்ச்சிக்கான சில சிறந்த ஆற்றல்களை இன்னும் வைத்திருக்கும் உறவுகளில் இது, கிட்டத்தட்ட தனித்துவமான ஒன்றாகும் – வலுப்படுத்த மற்றும் மேம்படுத்த. அதைச் செய்ய நாங்கள் ஆழ்ந்த உறுதியுடன் இருக்கிறோம்.

2022 ஆம் ஆண்டு இராஜதந்திர முன்னணியில் பல சவால்களைக் கொண்டு வந்தது. உக்ரைனில் ரஷ்யப் போரில் இந்தியாவும் அமெரிக்காவும் கொண்



டிருந்த வெவ்வேறு நிலைப்பாடுகள் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளைத் தடுக்கலாம் என்று கருதப்பட்டன.

இருப்பினும், சர்வதேச அரசியலின் அடிப்படையைப் போலவே, நாடுகள் (தத்தமது) தேசிய நலன்களால் வழிநடத்தப்படுகின்றன. இந்த விடயத்தில், இந்தியாவும் அமெரிக்காவும் வலுவான இருதரப்பு உறவில் இருந்து நிறையப் பெறுகின்றன. ரஷ்யா குறித்த நிலைப்பாட்டில் வேறுபாடுகள் இருந்தாலும், இந்தியா – அமெரிக்க உறவுகள் பெரிய அளவில் வலுப் பெற்று வருவது இதற்கு முக்கிய சான்றாகும்.

ஜி20 மாநாட்டில் அதன் தலைமைப் பதவியை ஏற்க இந்தியா தயாராகி வருகிறது. இது பொருளாதாரம் மற்றும் நிதி ஒத்துழைப்பு விவகாரங்களில் ஒருமித்த கருத்தை வளர்ப்பதில் நாட்டிற்கு ஒரு மைய நிலையை வழங்கும்.

தற்போதைய ஜி 20 உச்சி மாநாடு சமீபத்தில் முடிவடைந்த நிலையில், உறுப்பு நாடுகளுக்கு இடையே ஒரு கூட்டறிக்கையில் 'ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதில்' அவர்களின் பங்கிற்காக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய தூதுக்குழுவின்



முயற்சிகளை அமெரிக்க நிர்வாகம் பாராட்டியது.

இது அடுத்த ஆண்டு தலைமைப் பதவி இருக்கும் போது இந்தியா ஒரு பெரிய பாத்திரத்தை வகிக்க வழி வகுக்கிறது, மேலும் அந்த நாட்டுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவது அமெரிக்காவின் நலன்களுக்கு நல்லது.

வீழ்ச்சியடைந்து வரும் உலகப் பொருளாதாரத்தின் சவால்கள், ஐரோப்பாவில் போரினால் மனிதாபிமான நெருக்கடிகள் மற்றும் அதன் விளைவாக எரிசக்தி மற்றும் உணவு நெருக்கடிகள் மோசமடைந்த போதிலும், இருதரப்பு உறவுகளை மேலும் கட்டியெழுப்புவதற்கு இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஒரு முக்கியமான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### 2022 இல் இடம்பெற்றவை

இந்தோ – பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதாரங்களுடன் நெருக்கமான உறவுகளை வளர்க்கும் முயற்சியில், அமெரிக்காவின் மூலோபாய ரீதியாக முக்கியமான கூட்டாளியாக இந்தியா உள்ளது என்பது பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இந்தோ – பசுபிக் மட்டும் அல்ல, அமெரிக்காவிற்கும் சீன டிராகனின் அச்சுறுத்தலைக் கடந்து செல்ல இந்தியாவின் மூலோபாய ஆதரவு தேவைப்படும்.

உலகெங்கிலும் பார்க்கும்போது, உலகளாவிய நிகழ்ச்சி நிரலை முன்னோக்கி நகர்த்துவதற்கு உண்மையிலேயே உதவக்கூடிய பங்காளிகளை அமெரிக்காவும் பிடனும் தேடும் போது, அந்த பட்டியலில் இந்தியாவும், பிரதமர் மோடியும் மிக அதிகமாக முன்னிலையில் உள்ளனர். இந்த உறவில் என்ன வரப்போகிறது என்பதில் நாங்கள் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம். அதை முன்னோக்கி நகர்த்த உறுதிபூண்டுள்ளது என்று துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பைனர், கூறினார்

இந்த நோக்கத்திற்காக, இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மூலோபாய உறவின் முக்கிய திருப்புமுனை முன்னேற்றங்களில் ஒன்று ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடனான குவாட் மூலம் கூட்டாண்மை ஆகும். டோக்கியோவில் கூடிய குவாட் உச்சி மாநாடு 2022, சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ – பசுபிக் நோக்கிய உறுப்பு நாடுகளின் அர்ப்பணிப்புகளில் கவனம் செலுத்தியது. ஓராண்டு கால இடைவெளியில் நடந்த நான்காவது சந்திப்பு, இந்த நாடுகள் தங்களின் மூலோபாய பலதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் அதிக அர்ப்பணிப்புடன் இருப்பதாக தெரிவிக்கிறது.

"எங்களிடம் குவாட் உச்சி மாநாடு உள்ளது, எங்களிடம் இந்தியாவின் ஜி 20 தலைவர் பதவி உள்ளது, நாங்கள் பிரதமர் நரேந்திர மோடியைச் சேர்க்க ஆவலுடன் இருக்கிறோம், எங்களிடம் 2+2 குவாட் மந்திரி பதவிகளின் கூட்டம் நடைபெறுகிறது, நாங்கள் தலைமை நிர்வாக அதிகாரி உரையாடலை மீண்டும் தொடங்குவோம், நாங்கள் ஒரு முக்கியமான மற்றும் வளர்ந்து வரும். 2023 இன் தொடக்கத்தில் தொழில்நுட்ப உரையாடல் என்று ஃபைனர் கூறினார்.

(மூலம்: ஏ.ஐ.என்.)





காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தாளங்கள் தப்பானால் வியூகங்களும் கோணலாகும்

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 194


தமிழ் மக்கள் எதிர்பார்த்த தனிநாடோ, வெளிப்படையாக, பெயரளவில் சமஷ்டி என இல்லாவிடினும் குறைபாடுகள் கொண்டிருந்தாலும், அவர்கள் இன்று வலிந்து கேட்கும் அடிப்படைகளை இலங்கை-இந்திய ஒப்பந்தம் கொண்டிருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. அந்த ஒப்பந்தம் ஆக்கப்பட்ட நாள்களில் இருந்தே, தமிழர் தரணியெங்கும் அது எதிர்க்கப்பட்டு, எரிக்கப்பட்டு, வையப்பட்டு, நார்நாராக உரியப்பட்டு, கந்தலாக்கி, கசையப்பட்டு, தமிழர் பட்டி தொட்டி எல்லாம் பந்து போல விளையாடப்பட்டதால், அதன் சரத்துக்களை இங்கு விலாவாரியாக நான் பதியவில்லை. இந்தப் பதிவுக்கு தேவையானவை மட்டும் குறிப்பிடுகிறேன்.

அந்த ஒப்பந்தம் ஸ்ரீலங்காவின் சமுதாயம், சிங்கள - தமிழ் - முஸ்லிம் - பறங்கியர் என்பவற்றை உள்ளடக்கிய பல்லின, பன்மொழி பேசுபவர்கள் என்பதை ஒப்புக் கொண்டு, அந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு இனக் குழுமமும் அவர்களது தனித்துவமான கலாசாரம், மொழி என்பவற்றின் அடையாளங்களை கொண்டுள்ளன என்பதை அங்கீகரித்து, அவை வளர்க்கப்பட வேண்டும் எனவும், வடக்கு - கிழக்கு தமிழ் மொழி பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக அங்கீகரித்து, அந்தப் பிரதேசங்களில் இதுவரை காலமும் தமிழ் பேசும் மக்கள் மற்ற இனங்களுடன் சேர்ந்து வாழ்ந்துள்ளனர் என ஏற்றுக்கொண்டு, இப்படியான தன்மைகள்தான் ஒருமைப்பாட்டையும் இணக்கத்தையும் இனங்கள் இடையே வளர்த்து, அவை ஸ்ரீலங்காவின் ஒருமைக்கும் அதனது பிராந்திய ஒற்றுமைக்கும் உதவின என்பதை மனதில் கொண்டு, அந்த நாடு தொடர்ந்து பல்லின, பன்மொழி பல் சமயங்களைக் கொண்ட பன்மையான சமுதாயமாகவும், அங்கு வாழும் எல்லா மக்களும் சமத்துவமாகவும் பாதுகாப்புடனும் இணக்கத்துடன் வாழ்ந்து, தங்கள் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காகவே ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகின்றது என இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை ஏற்று, ஸ்ரீலங்காவிற்காகக் கையெழுத்திட்டவர் தனது உறவினரும், ஆசானுமாகிய ஜே.ஆர் தான் எனினும், ஜனாதிபதி ரணில் அதனை அன்று எதிர்த்தார். ஒப்பந்தம் கைச்சாத்தாகும் நிகழ்வையும், ராஜீவ் காந்திக்காகத் தரப்பட்ட கௌரவ தேநீர் விருந்தையும் அவர் புறக்கணித்தார். இந்த 35 வருட காலங்களில் வெளிப்படையாக ஒப்பந்தத்திற்கோ, 13ஆம் திருத்தச் சட்டத்திற்கோ ரணில் பொது மேடைகளில் ஆதரவு தெரிவித்தவர் அல்லர். இப்பொழுது முனகல்களோடு அவரைச் சுற்றி இருப்போர் அதனைப் பேச அவர் உந்துகிறார்.

இந்த 35 வருட காலங்களின் தொடக்கத்தில் இருந்தே, 2009 வரை போராடிய மையால் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்த சூழ்நிலை இருந்தும், அதனைச் சாதகமாக்கிப் பின் வந்த அரசுகள் ஒற்றையாட்சியை நிலை நிறுத்துவதிலும், வடக்கு - கிழக்கின் விகிதாசாரத்தை மாற்றுவதிலும், கண்ணாய் இருந்தமையும் அந்த இலக்குகள் தீவிரமடைந்து, போருக்குப் பின் மஹிந்த, கோட்டாபயவின் அரசுகள் வெளிப்படையாகவே, நாடு சிங்கள - பௌத்த நாடுதான், இங்கே மற்ற இனத்தவர்களும் மதங்களைப் பின்பற்றுவோரும் விருந்தாளிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று தம் பேச்சுக்களில் தெரிவித்தார்கள்.

கோட்டாபய தான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்காக 'ஒரு நாடு: ஒரு சட்டம்' என்ற அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் முனைப்பையே தொடங்கினார். நாடு சிங்கள - பௌத்த மயமாக்கப்பட்டு, அதிகாரம் அந்த இன,மத பேராண்மையிடமே இருக்க வேண்டும் என்பது



ஜே.ஆர்

அரசியல்வாதிகளிடம் மட்டுமல்ல, அந்தச் சமூகத்தின் மத நிறுவனங்களில் புத்திஜீவிகளிடமும் ஆழமாக வேரூன்றி இருக்கிறது. அப்படித்தான் நாடு உருவாக வேண்டுமென முன்னைய ஜனாதிபதி கோட்டா பொது வெளியிலே அடிக்கடி மட்டுமல்ல, தமது ஜனாதிபதி பதவியேற்பு உரையிலேயே தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் நாட்டினது 35 வருட நடப்புகளை பற்றி குறிப்பிடாமல், மூன்றாம் தரப்புகளின் தலையீடுகள் இன்றி, இவற்றைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கும் போது, அரசியல் கைதிகளின் விடுவிப்பு, நாட்டின் இனப் போரினால் நடந்த சம்பவங்களையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளினது உண்மைகளை ஒட்டிய இணக்கத்திற்கான செயற்பாடுகள், வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்காக அதனது எரிசக்தி வளங்களையும் திருகோணமலை உல்லாச துறையையும் விரிவு படுத்துவது பற்றியும் கோடி காட்டுகிறார்.

இவை யாவுமே பேசப்பட்டு ஆராயப்பட வேண்டியவைதான். ஆனாலும் அவை இணக்கம் காண்பது என்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருப்பதை அவதானிக்க முடியவில்லை.

இணக்கம் என்பது பிரிந்து, பாராமுகமாக இருப்பவர்கள் இடையே உள்ள வேறுபாடுகளைப் பேசித் தீர்த்து, நட்புறவை ஏற்படுத்துவதாகும்.

அதற்காக, முதலாவதாகவும் முக்கியமானதாகவும் இணக்கம் காணப்பட வேண்டிய கேள்வி, இந்த நாடு சிங்கள - பௌத்த நாடாக, அதன் பேராண்மையில் தொடர்ந்து முன்னேறி, மற்ற இனத்தவர்களையும் மதத்தினரையும் விருந்தாளிகளாக கருதப் போகின்றதா அல்லது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு பல இனங்கள், பல மொழிகள், பல மதத்தினர் வாழும் பன்முக சமூகம்தான் என்பதை ஏற்றுக் கொண்டு ஒற்றுமையாக முன்னேறுவதா என்பதுதான்.

தலைமைத்துவம் என்பது பிரபல்யத்துக்கும் மக்களின் விருப்பம் என்ற ஒன்றினைச் செய்வதற்குமானது அல்ல. எது சரியானதோ, அதனை முன்னெடுத்துக் காரியம் ஆற்றுவதுதான். இது, தமிழர் தரப்புத் தலைமைத்துவங்களுக்கும் பொருந்தும்.

ஆகவே, உண்மையான இணக்கத்திற்கும் தீர்வுக்கும் தமிழ்த் தலைவர்கள் துண்டு துண்டான கோரிக்கைகளை, அவற்றை மாற்றாகக் கோராமல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா தரப்பை பொறுத்த அளவில் ஒப்பேற்றித் தரக் கோருதல் வேண்டும். அவ்வளவே.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் இரண்டு பாகங்களைக் கொண்டது. ஒரு பாகம் - இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் மேலோங்கு அன்றில் அதிகார நிலைகளுக்கு குந்தகம் தராது, ஸ்ரீலங்காவை கட்டுப்படுத்துவது.

அடுத்தபாகம் - தமிழ் மக்களது இனப் பிரச்சினைக்காக ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுக்களால் பெறப்பட்ட இணக்கமான தீர்வு.

நான் முன்னர் கூறியவாறு தமிழ் தரப்புகளை சிங்கள பேராண்மை சக்திகள் எவ்வளவு எதிர்த்தாலும், எரித்தாலும், உதைத்தாலும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் மேலோங்கு நிலையை ஏற்ற நிலையிலே விம்மினாலும் பொருமினாலும் ஒப்பந்தத்தின் நடைமுறையில் ஸ்ரீலங்கா இயங்குகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம், அவர்களின் (புலிகளின்) பேச்சாளராக இந்தியாவுடன், பிரேமதாசாவுடன், சந்திரிகாவுடன், பின் நோர்வே இணக்கத்துடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் அவர்களைப் பிரதிநிதித்துவ படுத்தியவர். அந்த மதியுரைஞருக்கு முக்கியமாக நோர்வேத் தரப்புகள் மூலம், பேச்சுவார்த்தைக் காலங்களில் ஈடுபட்டிருந்த சர்வதேச தரப்புகள் ஊடாகவும், எப்படி பேச்சுவார்த்தைகளில் எட்டப்படும்



ரணில்

எந்தத் தீர்மானமும் எவ்வாறு இந்திய தரப்புகளுக்கு தெரிவிக்கப்பட்டு, அவர்களது அபிப்பிராயங்கள் பெறப்பட்டன என தெரிந்திருந்தது. இந்தத் தொடரில் அவற்றை விரிவாக குறித்து இருந்தேன்.

நிதி உதவி அளிக்கும் நாடுகளின் டோக்கியோக் கூட்டத்தை விடுதலைப் புலிகள் பகிஷ்கரிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் இந்திய நிலைப்பாடுகள் பற்றியும், அதன் சர்வதேசத் தாக்கங்கள் பற்றியும் அவர்களுக்கிடையே கலந்துரையாடல்கள் இருந்தாலும், விடுதலைப் புலிகள் இந்தியா பற்றிய நிலைப்பாட்டில் மாற்றம் கொள்ளவில்லை.

2006 இல் நிலைமைகளை உணர்ந்த மதியுரைஞர் பாலசிங்கம் இந்தியத் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு நேர்காணலை வழங்கி, விடுதலைப் புலிகளின் தவறுகளை கோடி காட்டி, இணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தாலும், விடுதலைப் புலிகள் அது தமது முன்னெடுப்பல்ல என ஏற்காததமையால் இந்தியாவும் ஆர்வம் காட்டவில்லை.

இப்படியான போக்குகளாலும், இந்தியப் படைகள் 1990ல் பிரேமதாஸாவுடன் ஒருங்கிணைந்து வெளியேற்றப்பட்டதன் பின், 2009 வரை, தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த தீர்வை குறித்து இந்தியா பிரத்தியேகமாக எந்த முன்னெடுப்பையும் மேற்கொள்ளவில்லை. அதற்குக் கூட்டமைப்பு தாங்கள் சிங்களத் தரப்புகளோடு பேசுகிறோம் என்கிறார்கள். இன்று வரை தாங்களே இணக்கமாகப் பெறக்கூடிய தீர்வை பேசிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள தரப்புகளால் இந்தியாவை தமிழர் சார்பாக ஈடுபடுவதை விடுத்து வெளியே வைக்க இந்தப் பேச்சுத் தந்திரங்கள் உதவுகின்றன. அதே சமயம் தமிழர் பிரதேசங்கள் அபகரிக்கப்படுவதும் நீண்டுகொண்டே போகும்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள்

கனகபுரம்





நல்லூர்





கோப்பாய்









வடமராட்சி - எள்ளங்குளம்





யாழ். சாட்டி





முள்ளியவளை







சம்பூர் - ஆலங்குளம்







வவுனியா - ஈச்சங்குளம்





அம்பாறை - கஞ்சிக்குடிச்சாறு





முல்லைத்தீவு - அளம்பில்










வவுனியா நகர சபை மண்டபம்





நாவற்குழி கடல் நீரேரி

யாழ்ப்பாணத்தில்




காலைக்கதிர்
Kalaikkathir

# மின்கட்டணத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை பத்திரம்!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



நாட்டின் மின் உற்பத்திக்கான கேள்வி, மின்கட்டணம் தொடர்பில் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு காலத்தின் தேவைக்கமைய செயற்படவில்லை. இந்த ஆணைக்குழுவை ஸ்தாபிக்காமல் இருந்திருக்கலாம்.

நடைமுறைக்கு சாத்தியமான வகையில் மின்சார கட்டணம் தற்போது திருத்தம் செய்யப்படவில்லை. மின்கட்டணத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்கான பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்,மின்சார கட்டணத்தை நடைமுறைக்கு சாத்தியமாகும் வகையில் திருத்தம் செய்யாவிட்டால் இந்த சேவை துறைகளை முன்னெடுத்து செல்ல முடியாது என மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மத தலங்களை மாத்திரம் இலக்காக கொண்டு மின்கட்டணம் திருத்தம் செய்யப்படவில்லை. மாற்றுத்திட்டங்களை செயற்படுத்தும் வரை மத தலங்களுக்கான மின் கட்டணம் தொடர்பில் அவதானம் செலுத்த முடியாது எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எரிபொருள் மற்றும் மின்விநியோக கட்டமைப்பில் காணப்படும் நெருக்கடிக்கு எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒப்பீட்டளவில் தீர்வு காண அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மத தலங்களுக்கான மின் கட்டண திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உரையாற்றியுள்ளார்.

அனைத்து சேவைத்துறைகள் மற்றும் வீட்டுபாவனையை உள்ளடக்கிய வகையில் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மத தலங்களை மாத்திரம் இலக்காககொண்டுமின்கட்டணம்அதிகரிக்கப்படவில்லை.

2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் தற்போது மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது, இருப்பினும் 2014 ஆம் ஆண்டு 25 சதவீதத்தால் மின்கட்டணம் குறைக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நுரைச்சோலை அனல் மின்நிலையம் தேசிய மின்கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டதால் மின்னுற்பத்திக்கான கேள்வி குறைக்கப்பட்டு மின்கட்டணம் 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டது.

இருப்பினும் கடந்த காலங்களில் மின்சாரம் தொடர்பில் கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை, மின்னுற்பத்திக்கான கேள்வி அதிரிக்கப்பட்டபோதும்,அரசியல் காரணிகளுக்காக மின்கட்டணம் திருத்தம் செய்யப்படவில்லை,இதன் பொறுப்பை ஆட்சியில் இருந்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்க வேண்டும்.

தேவையான நேரத்தில் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கும், குறைப்பதற்கும் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் இல்லை.

அரசாங்கத்துக்கும் அந்த அதிகாரம் இல்லை. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மின்கட்டணம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதி காரம் காணப்பட்ட போதும் ஆணைக்குழு பொறுப்புடன் செயற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மின்கட்டணம் திருத்தம் மாத்திரமல்ல மின்பாவனை கேள்வி தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். இந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கபடாமலிருந் திருந்திருக்கலாம்.

இலங்கைபொதுப்பயன்பாட்டுஆணைக்குழுவின் பணிகள் முறையாக இடம்பெறவில்லை.விடயதானம் தொடர்பில் திறனற்றவர் ஆணைக்குழுவின் தலைவராக பதவி வகிக்கும்போதும் போது சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது,

இலங்கைபொதுபயன்பாட்டுஆணைக்குழு 2013 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மின்கட்டணத்தை திருத்தம் செய்யாத காரணத்தால் 2022 ஆம் ஆண்டு மின்கட்டண திருத்தம் ஊடாக மக்கள் மீது பாரிய சுமையை சுமத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இலங்கை மின்சார சபையின் பரிந்துரைகளுக்கு அமைய மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை. கடந்த ஜனவரி மாதம் ஒரு கிலோகிராம் நிலக்கரியின் விலை 24 ரூபாவாகக் காணப்பட்டது, ஆனால் தற்போது 114 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

மறுபுறம் டீசலின் விலை 431 ரூபாவாகவும்,உராய்வு எண்ணெயின் விலை 320 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளது ஆகவே, நடைமுறைக்கு சாத்தியமாகும் வகையில் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மின்கட்டணத்தை திருத்தம் செய்யவில்லை.

ஆகவே, மின்கட்டணத்தை மீண்டும் திருத்தம் செய்யாமல் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதே உண்மை.24 மணித்தியாலமும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க வேண்டுமாயின் அமுல்படுத்த வேண்டிய திட்டம் தொடர்பில் இலங்கை மின்சார சபை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. தற்போதைய செலவுகளுக்கமைய ஒரு மின் அலகு உற்பத்திக்கு 56.90 ரூபா செலவாகுகிறது,ஆனால் ஓர் அலகு மின்சாரத்திற்கு 29 ரூபா அறவிடப்படுகிறது.

ஒருமாத மின் உற்பத்திக்கு மாத்திரம் 8 ஆயிரத்து 890 கோடி ரூபா செலவாகும் நிலையில் ,மின் கட்டணம் அறவிடல் ஊடாக 40 கோடி ரூபா கிடைக்கப் பெறுகிறது, செலவுக்கும், வருமானத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது.

ஆகவே மின்கட்டணம் மீண்டும் திருத்தம் செய்யப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை அறிவுறுத்தியது, அதற்கமைய மின்கட்டணம் திருத்தம் தொடர்பில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோக கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டும் எதிர்த்தரப்பினர் எவ்வித மாற்றுத் திட்டங்களையும் இதுவரை முன்வைக்கவில்லை. வெளிநாட்டு கையிருப்பு பற்றாக் குறையால் எரிபொருள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை. இதனை ஒருபோதும் மறுக்கவில்லை.

நாடு இயல்பான நிலையில் உள்ளது என ஒரு தரப்பினர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது என்பதை உத்தியோகபூர்வமாக அறிவித்ததன் பின்னர் கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்க எவரும் முன்வருவதில்லை. இதுவே உண்மை.

மிகவும் நெருக்கடியான நிலையில் தான் எரிபொருள், எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது. அமைச்சு மட்டத்திலான முறையான முகாமைத்துவத்தால் தற்போது எரிபொருள் விநியோகம் சீரமைக்கப்பட்டுள்ளது.

ஊடகங்கள் தவறான விடயங்களை சமூகமயப்படுத்துகின்றன. கி.யு.ஆர். முறைமை எதிர்வரும் மாதம் முதல் இரத்து செய்யப்படும் என வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும்.

எரிபொருள் விநியோகத்தை முகாமைத்துவ அடிப்படையில் முன்னெடுத்து செல்ல வேண்டும். புதிய திட்டத்துக்கமைய 65 ஆயிரம் ஓட்டோக்களுக்கு 10 லீற்றர் பெற்றோலையும்,பதிவு செய்யப்பட்டுள்ள 17 ஆயிரம் பஸ்களுக்கு 80 அல்லது 90 சதவீதமளவில் டீசலையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கோட்டா அடிப்படையில் தொடர்ந்து எரிபொருள் விநியோகிக்கப்படும்.

மின்கட்டணத்தை செலுத்த முடியாத காரணத்தால் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது என எதிர்த்தரப்பினர் முன்வைத்துள்ள விடயம் முற்றிலும் அடிப்படையற்றதாகும். மின்விநியோகம் துண்டிப்பது தொடர்பில் எனக்கு தீர்மானம் எடுக்க முடியாது.

ஆனால் சுகாதார சேவையில் மின் விநியோகம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது உணர்வு பூர்வமாக அவதானம் செலுத்துமாறு மின்சார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். சுகாதாரத்துறை சேவை பாதிக்கப்பட்டால், அது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்.

மத தலங்களுக்கான மின்கட்டணம் தொடர்பாகத் தனித்த தீர்மானங்களை எடுக்க முடியாது,எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 134 விகாரைகளின் மாத மின்கட்டணததை இலங்கை மின்சார சபை செலுத்தியது,ஆனால் புதிய கட்டண திருத்தத்தின் போது 134 விகாரைகளின் மின்கட்டணத்தை இலங்கை மின்சார சபை செலுத்தக் கூடாது,அவர்களே செலுத்த வேண்டும் என இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்தது, அதற்கமையவே ஒருசில விகாரைகளின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஒருசில விகாரைகளின் மின்கட்டணத்தை அவர்களே செலுத்த வேண்டும் என மகாநாயக்க தேரர்களும் தெரிவித்துள்ளார்கள்.

மின்சார துறையில் மாற்று திட்டங்களை செயற்படுத்தும் வரை மின்கட்டண திருத்தம் தொடர்பாக அவதானம் செலுத்த முடியாது.காலத்தின் தேவைக்கு அமைய எரிபொருள் மற்றும் மின்சார கட்டணம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதை விருப்பமில்லாத வகையில் தெரிவித்துக் கொள்கிறேன். – என்றார்.

# இவ்வருட இறுதிக்குள் உள்ளூராட்சி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கின்றோம்!

## எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவிப்பு



எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்த முடியாது. இந்த வருட இறுதிக்குள் தேர்தலுக்கான தினம் மற்றும் வேட்புமனு தாக்கல் தொடர்பான அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழு நிச்சயம் வெளியிடும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மார்ச் 20 இற்கு முன்னர் சபை உருவாக்கப்பட வேண்டுமெனில் , பெப்ரவரி இறுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு ஏதுவாக அமையும் என்று பலராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பில் தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அரசமைப்பின் ஊடாக உரித்தாக்கப்பட்டுள்ள உதாசீனப்படுத்த முடியாத பொறுப்பிற்கு, எல்லை நிர்ணய குழுவின் செயற்பாடுகள் எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தா.

எல்லை நிர்ணய குழுவால் தேர்தலைக் காலம் தாழ்த்த முடியும் என்று அனைவரும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்தக் குழுவால் தேர்தலைக் காலம் தாழ்த்த முடியாது.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு மேல் நாடாளுமன்றமும் , நீதிமன்றமும் காணப்படுகின்றன. எனவே எல்லை நிர்ணய குழுவின் ஊடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்த முடியும் என்று எவரேனும் கூறுவார்களாயின் , அவர்கள் அரசியல் மற்றும் சட்டம் என்பவற்றை அறியாதவர்களாகவே இருப்பர்.

தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை வேறு எவராலும் கேள்விக்குட்படுத்த முடியாது. அதேபோன்று ஆணைக்குழுவிற்கு இதனை உதாசீனப்படுத்தவும் முடியாது.

இவ்வாண்டு நிறைவடைவதற்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கானதும் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான அறிவிப்பை ஆணைக்குழு நிச்சயம் வெளியிடும் என எதிர்பார்க்கின்றோம்.

பெப்ரவரி 28 ஆம் திகதியே எம்மிடம் எல்லை நிர்ணய அறிக்கை கோரப்பட்டுள்ளது. அன்றைய தினம் நாம் எமது அறிக்கையை சமர்ப்பிக்கும் போது , தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகளும் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் புதிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனில் , பெப்ரவரி இறுதி வாரத்திற்குள் தேர்தல் நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட வேண்டியது கட்டாயமாகும்.

எனவே எமது அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே , தேர்தல் நடத்தப்பட்டு முடிவுகளும் வெளியாகி விடும் – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2022இல் வெளியிடப்பெற்றது.